03.04.2024

IDOP 150/2022

**PW** 1 திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தற்போது வெளிநாட்டில்தான் வேலை பார்க்கிறேன். விடுமுறைக்கு வந்திருக்கிறேன். நிருபண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞரிடம் விபரம் சொன்னது நான்தான். என் தந்தையும் உடன் இருந்தார். நிருபண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் நானும் எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பிறகு 6 மாதங்கள் என்னுடைய வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்தோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 6 மாதங்களில் எங்களுக்குள் தாம்பத்ய உறவே ஏற்படவில்லை என்று கூறியுள்ளேன். ஆனால் திருமணம் ஆகி 8 வது நாள் நான் வெளி நாட்டிற்கு போய்விட்டேன். அந்த 8 நாள் மட்டும்தான் நாங்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தோம் என மனுவில் சொல்லி இருக்கிறேன். அதன்பின்பு ஒரு வருடம் கழித்துதான் நான் வெளிநாட்டில் இருந்து வந்தேன். நான் மனுவிலும் என் நிருபண வாக்குமூலத்திலும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். TAWAM (தவாம்) - AlIAIN மருத்துவமனை, அபுதாபியில் வேலை பார்த்தேன். நான் கடைசியாக 1 லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கினேன். கடைசியாக வாங்கிய சம்பள பில்லை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் தற்போதும் அந்த மருத்துவமனையில் வேலை பார்க்கிறேன் என்றும் மாதம் ரூ.1-1/2 லட்சம் சம்பாதித்து வருகிறேன் என்றும் இந்த விபரத்தை நான்தான் என் மனைவியிடம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணம் முடிந்த பிறகு 8 நாட்கள் மட்டுமே ஊரில் இருந்தேன் என்றும் ஆனால் எதிர்மனுதாரரை நான் வாழ கூப்பிட்டதாகவும் அவர் வர மறுத்துவிட்டதாகவும் மனுவில் சொல்லி இருப்பது பொய்யான தகவல் என்று சொன்னால் சரியல்ல. முதலில் நான் மனுதாரரை என்னுடன் வாழ அழைத்தேன். அப்போது அவர் வரவில்லை. அதன்பிறகு எங்களுக்குள் பிரச்சினை அதிகம் ஆனபோது எதிர்மனுதாரர் மனு செய்து சேர்ந்து வாழக் கோரினார். நான் அதற்கு சம்மதிக்கவில்லை. எதிர்மனுதாரரை எங்கள் வீட்டில் உள்ள பெரியவர்கள் மூலமாக வாழ கூப்பிட்டேன். அது 2017 ம் ஆண்டு 7 வது மாதம். இந்த விபரத்தை என் மனுவில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/

ஒம்/ஜெசிந்தா மார்ட்டின்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்